R4930

TO SHOW THYSELF APPROVEL
உன்னை உத்தமனாய் நிறுத்தும்படி காண்பித்தல்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும்
உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." 2 தீமோத்தேயு 2:15

தேவன் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகளை பெரிதும் ஆசீர்வதித்து "அறுவடை" வேலையில் பயன்படுத்துவதாக தெரிகிறது. இன்றைக்கு சத்தியத்தில் களிகூருகிறவர்கள் எவரும் இந்த அறிக்கையை கொஞ்சம் கூட மறுக்கமாட்டார்கள். சிலர் இந்த அறிக்கையை இதைக் காட்டிலும் இன்னும் பலமாக வெளிப்படுத்துவார்கள். இந்த சத்தியத்தில் கணிசமாக களிகூருகிறவர்களில் அநேகர் அதில் ஒரு அபூரண அறிவையே பெற்றிருக்கிறார்கள் என்ற உணர்வுக்கு நாம் அவ்வப்போது கொண்டு வரப்படுகிறோம், அவர்கள் சத்தியத்தில் வேரூன்றவில்லை. பூமியில் ஊன்றப்படவில்லை, ஸ்தாபிக்கப்படவில்லை, உறுதிப்படுத்தப்படவில்லை, அவர்களால் "சத்திய வசனத்தை நிதானமாய் பகுக்க" இயலவில்லை. அவர்கள் மற்றவர்களிடம் சத்தியத்தை போதிக்க வெட்கப்படாத ஊழியக்காரனாக இருக்கவில்லை.

இவர்களில் சிலர் சத்திய அறிவில் குறைவுள்ளவர்களாகவும், வெறும் குழந்தைகளாகவும் ஆரம்ப நிலையிலும் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை தியானிப்பதற்கு முழு சந்தர்ப்பத்தை இன்னும் பெறவில்லை. சிலர் முதல் தொகுதியை படித்திருக்கிறார்கள். மற்ற தொகுதிகளில் முக்கிய குறிப்புகளை மட்டும் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை வேதாகம வகுப்புகள் பற்றி அறிந்து, அதில் கலந்து கொண்டு, சகோதரர்களிடம் அதுகுறித்து விவாதித்து சில பிரசங்கங்களை கேட்டிருக்கலாம். இதன்மூலம் தாங்கள் ஆறு வேதாகம தொகுதிகளின் போதனைகளை அறிந்திருக்கிறோம் என்று கருதுகிறார்கள். அவற்றை படித்து அறிந்து கொண்டது போல நினைக்கிறார்கள்.

இது ஒரு பெரிய தவறாக இருக்கிறது. இன்னும் அது தீவிரமான தவறாக இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும் விசேஷமாக சோதிக்கப்படவும் பரீட்சிக்கப்படவும் வேண்டிய காலத்தில் நாம் இருக்கிறோம். மேலும் தெய்வீக திட்டத்தை ஓரளவுக்கு புரிந்து கொண்டவர்கள், வழங்கப்பட்டுள்ள சர்வாயுத வர்க்கங்களில் ஒரு பகுதியை மட்டுமே பெற்றிருக்கிறவர்கள், இந்த தீங்கு நாளில் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவானவனின் தாக்குதல்களை தாக்குப்பிடித்து நிலைத்து நிற்க முடியாதிருப்பார்கள். கர்த்தரிடத்தில் சரியான வைராக்கியத்தையும் அவரது திட்டத்தில் சரியான அன்பையும் கொண்டிருப்பவர்களாக இருந்தால், அவர்கள் அந்த வைராக்கியத்தை வேதாகம தொகுதிகளை முழுமையாக படித்து அறிந்து கொள்ளுவதில் காண்பிக்க வேண்டும். இதற்கு குறைவாக செய்வது ஏற்புடையதல்ல.

நமது பிரியமான நண்பர்களில் சிலர் இப்போது அல்ல, வருடங்களுக்கு முன்பாக படித்தார்கள். அவற்றின் போதனைகளை எந்த அளவுக்கு ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பாருங்கள். உண்மையில் பார்க்கும் பொழுது அவற்றில் பெரும்பாலான போதனைகளை அறியாதிருக்கிறார்கள். நாம் ஒழுகுகிற மண்பாத்திரம். தெய்வீக சத்தியமாகிய அந்த விலையேறப் பெற்ற பொக்கிஷம், நாம் மீண்டும் நிரப்பவில்லையென்றால், அவையனைத்தும் வெளியேறிவிடும். மறுபடியும், அதை நிரப்புவதற்கு ஒருவழி வேதாகமத்திற்கு நேரடியாக செல்வது. வேதவாக்கியங்கள் மானிட போதகர்களின் அவசியத்தை வலியுறுத்துகிறது. அவர்கள் தங்கள் சொந்த சக்தியினால் வேத வாக்கியங்களை தெரிந்து கொள்வதைக் காட்டிலும் ஒரு போதகர் மூலமாக அதிகமாக தெரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட வாசகர்கள் இந்த வருடம் வேதாகம பாகங்களை படிக்காவிட்டால், முன்னர் ஆரம்பத்தில் அறிந்திருக்கிறவைகளை மறந்துவிடக்கூடும்.